வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் அக்டோபர் மாதம் 28.10.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

முன்னிலை : திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி
நகர்மன்ற தலைவர்

**பொருள் :1**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24-B-24-H, ன்படி அந்தந்த நகராட்சிகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபை ஏற்படுத்துவதற்கும் அதன் செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளின் (வார்டு குழு மற்றும் பகுதி சபை) விதிகள் 2022 உருவாக்கப்பட்டு அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல் துறை நாள் 24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.358 நாள் 24.06.2022 இல் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி வரப்பெற்றுள்ளது. அதன்பேரில் வார்டு குழு (Ward Committee) மற்றும் பகுதி சபை (Area Sabha) குழு நிர்ணயம் செய்திடவும், குழு குறித்த செயல்பாடுகள் தெரிவித்து வரப்பெற்ற அரசாணை மற்றும் அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :**

அ). மன்றம் பதிவு செய்யலாம்.
ஆ). அரசாணை வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும். அரசிதழில் வெளியீடுவதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.976/2022/சி1**

**நகர மன்ற தீர்மானஎண். 307 அனுமதிக்கப்படுகிறது.**